# யோபு.

காலக்கணிப்பு

| | |
|---|---|
| ஆபிரகாமின்அழைப்பு | 2090 **கி.மு** |
| யோபு | **கி.மு** 2007 இருக்கலாம் |
| யோசேப்பின் மரணமும் ஆதியாகமத்தின் முடிவும். | 1805 **கி.மு.** |

**பின்னனி.**

பழைய ஏற்பாட்டு கவிதைப் புத்தகங்கள் ஐந்தில் யோபு முதல் புத்தகமாகும். — ஒழுங்குக் கிரமத்திலும், சரித்திர முறைப்படியும் முதலாவது புத்தகமாகும். கி.மு. 2000 ஆண்டுகள் ஆபிரகாமின் காலப்பகுதியாகும். யோபு வேதாகமத்தின் பழைய புத்தகமாகும். இது யோபுவின் கதையைக் கூறுகின்றது, இவர் நீதிமானாகவும் செல்வந்தனாகவும் இருந்தார். இவரைத் சோதிப்பதற்காக, கர்த்தர் சாத்தானை அனுமதித்தார். இது மற்றய கவிதைப் புத்தகங்களைப் போல கவிதைப் புத்தகமாக இருந்த போதிலும், இது சரித்திரத்துடன் பின்னிப்பிணைந்ததாய் உள்ளது. எசேக்கியேல் புத்தகமும் (14:14இ 20)யாக்கோபு புத்தகமும், (5:10-11) யோபுவை சரித்திர புருஷனாக கருதுகின்றது.

**எழுதியவர்.**

தெரியாது. இது ஆரம்பகாலப் புத்தகமாக இருப்பதாலும், பஞ்சாகமத்தை ஒத்ததாக இருப்பதாலும், சிலர் மோசே இதனை

எழுதினார் என்று கருதுகின்றார்கள் இதற்கான சரியான சான்றுகள் எதுவும் இல்லை.

காலம். 2000. கி. மு.

- முற்பிதாக்களின் வாழ்க்கை வடிவம் இதில் காணப்படுகின்றது.
- முற்பிதாக்களினால் கர்த்தருக்குப் பாவிக்கப்பட்ட பெயர்கள் இதில் பாவிக்கப்படுகின்றது. ( எல்சடாய், வல்லமையுள்ள தேவன் போன்ற வார்த்தைகள் )
- இஸ்ரவேலர்களின் சரித்திரம் இங்கு கூறப்படவில்லை.

**நோக்கம்**.

- குற்றமற்ற மனிதர்கள் ஏன் துயரப்படுகின்றார்கள் என்ற கேள்விக்கு பதில் கொடுக்கப்படுகின்றது.
- மனிதர்களுள் நல்ல வழியைப் பின்பற்றுபவர்கள் கர்த்தர் மீது கொண்டுள் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் அதிகரிக்கச் செய்வதற்காக (42:1-5ஏசா. 55:9).

**சிறப்பான அம்சங்கள்**

- இதுமனிதவர்க்கத்தின் துன்பங்கள் மீது கவனத்தைக் காண்பிக்கிறபடியால், யோபு எல்லா சமயத்தாருக்கும் பிரதான வேண்டுகோளை விடுக்கின்றது.
- யோபு, சகரியாவைப் போல பரலோகவாசிகளுடன் ஏற்பட்ட குறுகிய முரண்பாட்டின் கண்ணோட்டத்தை கூறுகின்றது.
- டயனோசரைப் பற்றிக் கூறும் ஒரேயொரு வேதாகமப் புத்தகம் யோபு மாத்திரமாகும். (40:15 இப்போதும் **பிகெமோத்தை** நீ கவனித்துப்பார் உன்னை உண்டாக்கினது போல அதையும் உண்டாக்கினேன் 41:1அது மாட்டைப்போல் புல்லைத் தின்னும்.

**லிவியாதானை** தூண்டிலினால் பிடிக்கக்கூடுமோ? அதின் நாக்கை நீ விடுகிற கயிற்றினாலே பிடிக்கக்கூடுமோ? )

- உலகத்தின் ஆரம்பத்தை யோபு புஸ்தகம் கூறுகின்றது, இது ஆதியாகமம் 1க்கு சமமாக காணப்படுகின்றது. (38:4-11)

- முற்பிதாக்களின் காலத்தில் கர்த்தருடைய பெயரை எல்சடாய் என்று அழைப்பார்கள். அதற்கு சர்வவல்லவர் என்று அர்த்தமாகும். இது ஆதியாகமத்திலும், யோபு புத்தகத்திலும் பல தடவைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

பிரசங்கி

- யேபு புத்தகம் வேதனையின் அர்த்தத்தை வெளிப்படுத்துகின்றது பிரசங்கிப் புத்தகம் வாழ்க்கையின் அர்த்தத்தை வெளிப்படுத்துகின்றது.

**சுருக்கம்.**

சாத்தானால் குறைகாணப்படல். (1–2)

யோபு அறிமுகப்படுத்தப்படல். (1:1-5)

சாத்தானின் குற்றச்சாட்டுக்கள்.(1:6-12)

யோபுவின் துக்கம் அவருடைய பிரதிபலிப்பு (1:13-22)

சாத்தானின் அதிக குற்றச் சாட்டுக்கள். (2:1-6)

யோபுவின் மேலதிக துக்கங்கள். அவருடைய நண்பர்களினதும், மனைவியினதும் பிரதிபலிப்புக்கள். (2:7-13)

**நண்பர்களுடனான பேச்சுவார்த்தை. 1ம் சுற்று. (3–14)**

யோபுவின் புலம்பல். (3)

எலிப்பாசு பேசுதல். (4–5)

யோபுவின் பிரதிபலிப்பு. (6–7)

பில்தாத் பேசுதல். (8)

யோபுவின் பிரதிபலிப்பு (9–10)

சோப்பார் பேசுதல் (11)

யோபுவின் பிரதிபலிப்பு (12–14)

**நண்பர்களுடன் பேசுதல். 2ம் சுற்று (15–21)**

எலிப்பாஸ் பேசுதல். (15)

யோபுவின் பிரதிபலிப்பு. (16–17)

பில்தாத் பேசுதல். (18)

யோபுவின் பிரதிபலிப்பு. (19)

சோப்பார் பேசுதல் (20)

யோபுவின் பிரதிபலிப்பு (21)

நண்பர்களுடன் பேசுதல். **3ம் சுற்று.** (22–31)

எலிப்பாஸ் பேசுதல். (22)

யோபுவின் பிரதிபலிப்பு (23–24)

பில்தாத் பேசுதல் (25)

யோபுவின் பிரதிபலிப்பு (26–31)

எலிகூவின் விளக்கவுரை. (32–37)

எலிகூ, யேபுவையும், அவருடைய நண்பர்களையும் கண்டித்துக்கூறுதல். (32–33)

யோபுவின் குற்றச்சாட்டுக்களை எலுகூ தவறென நிரூபித்தல். (34–35)

எலிகூ கர்த்தருக்காக நிற்றல். (36–37)

கர்த்தரை சந்தித்தல். (38:1–42:6)

யோபுபைற்றிய கர்த்தருடைய கேள்வி (38:1–40:2)

யோபுவின் பிரதிபலிப்பு (40:3-5)

யோபுவிற்கான அதிக கேள்விகள். (40:6–41:34)

யோபுவின் பிரதிபலிப்பு (42:1-6)

கர்த்தரிடமிருந்து கருத்துக்கள். (42:7-17)

ஆவிக்குரிய மீள்நிலை. (42:7-9)

உடல்சார்ந்த மீள்நிலை. (42:10-17)

**சாத்தானின் குற்றச் சாட்டுக்கள். (1–2)**

1:1-5 **யோபுவின் விசுவாசம், குடும்பம், செல்வம்**. யோபு ஒரு செல்வந்தனாகும். ஒரு பெரிய நல்ல குடும்பம் அவருக்குள்ளிருந்தது, அவர்கள் மிகவும் சந்தோசமாக இருந்தார்கள். அவருக்கு ஏழு ஆண்பிள்ளைகள் இருந்தார்கள், இவர்கள் ஒரு முழுமையான குடும்பமாக இருந்தார்கள். (2:13இ 42:8இ 13). இதை எழுதியவர் யோபு ஒரு குற்றமற்ற வாழ்வு வாழ்தவர் என்று கூறுகிறார். (1:1இ 5) பின்பு அவர் அனுபவித்த துயரங்கள் அவருடைய பாவத்தின் நிமித்தம் ஏற்பட்டவையல்ல.

1:6-12 **நரகம் பரலோகத்துடன் போட்டியிடுகின்றது**. சாத்தான் கர்த்தருக்கு முன்பாகத் தோன்றி, யோபு கர்த்தரைச் சேவிப்பதற்கு உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களே காரணமாகும் என்று குறை கூறினான். (1:9-11). கர்த்தர், சாத்தானுக்கு, யோபுவைச் சோதித்து துன்பப்படுத்துவதற்கு அனுமதி கொடுத்தார். ஆனால் சரீரப்பிரகரமன எந்தவிதகேடும் யோபுவிற்கு ஏற்படக் கூடாது என்ற நிபந்தனையையும் விதித்தார். (1:12). சாத்தான் எங்கும் காணப்படுகின்றான் என்று வேதாகமம் கூறுகின்றது. அவன் விசுவாசிகள்மீது எப்போதும் குற்றம் சுமத்திக் கொண்டே இருக்கிறான். (சகரியா. 3:1-4 வெளி. 12:10). அவன் கர்த்தரை எதிர்த்து நின்றபடியால் பரலோகத்திலிருந்து தள்ளப்பட்ட போதிலும், (ஏசா.

14:12-15 எசேக். 28:12-19) சாத்தான் தான் ஒரு தூதன்மாதிரி பரலோகம் செல்லும் வழியையும் வைத்துக் கொண்டிருக்கின்றது. (1:6)தூதர்கள் விடயத்தில் இரண்டு விதமானவர்கள் உண்டு, ஒன்று நல்ல தூதர்கள், அடுத்து கெட்ட தூதர்கள். சாத்தானால் நமது எண்ணங்கள் எதிகாலங்களை அறிந்து கொள்ள முடியாது. யோபு உறுதியாயிருப்பார் என்பதை அவனுக்கு தெரியாதிருந்தது.

1:13-19 **முழு அழிவும் ஒரே நாளில் வரும்**. மனிதர்களின் எதிரிகளும், இயற்கை அழிவுகளும், யோபு ஒரே நாளில் தன்னுடைய சொத்துளையும் பிள்ளைகளையும் இழந்தார்.

1:20-22 **கர்த்தருடைய நாமம் ஆசீர்வதிக்கப்படுவதாக**. யோபு தன்னுடைய துக்கங்களை எதிர்கொண்டார், ஆனால் கர்த்தரிடம் எந்த கேள்ளிகளையும் கேட்காமல், விசுவாசமாக இருந்தார்.

2:1-8 **அவருடைய விசுவாசம் சரீரதுன்பத்திலிருந்து அவரைக் காப்பாற்றுமா?** ஏமாற்றப்பட்டாலும், யோபு இன்னமும் கர்த்தரில் விசுவாசமாக இருக்கின்றார். ஆனால் மேலும் உபத்திரபம் கூடும்போது அவனுடைய விசுவாசம் தோற்றுப் போகும் என்று, சாத்தான் யோபுவுக்கு சரீரப்பிரகாரமான துன்பத்தைக் கொடுப்பதற்குக் கர்த்தரிடம் அனுமதியைக் கேட்டான். கர்த்தர் அவ்வாறு செய்வதற்கு சாத்தானுக்கு அனுமதி கொடுத்தார். இதன்பயனாக யோபுவிற்கு தோல்வியாதி ஏற்பட்டது.

2:9-10 **அவருடைய உதவியாளரினால் ஒரு உதவியும் வரவில்லை.** யோபுவின் மனைவி மிகுந்த துக்கத்தினால், யோபுவிற்கு எந்தவித உதவியும் செய்ய முடிய வில்லை. ஆனால் அவள் கர்த்தர்மீது வெறுப்பைக் காட்டும்படிக்கு யோபுவைக் கேட்டுக் கொண்டாள். நம்மால் தாங்கமுடியாத தொல்லைகளை அவர் அனுமதிப்பதில்லை. நம்மை புடமிடுவதற்காக அனுமதிப்பார். (1கொரி 10:12-13, ரோ 8-28)

2:11-13 யோபுவின் மூன்று நண்பர்கள். அவர்கள் ஆறுதல்படுத்துவதற்கு வந்தார்கள். அவர்கள் கண்டிப்பதற்காக நின்றார்கள். எலிப்பாஸ், பில்தாத், சோப்பார் என்பவர்களே யோபுவின் நண்பர்களாகும். அவர்கள் துக்கத்தில் இருப்பவருக்கு ஆறுதல் கூறுவதற்கு அங்கு விஜயம் செய்தார்கள். அவர்களுக்கு அனேக பிரச்சனைகள் துக்கங்கள் இருந்த போதிலும், யோபுவின்

துக்கங்களுக்கு ஆறுதல் கூறுவதற்காக அங்கு ஒரு வாரம் தங்கி இருந்தார்கள். அக்காலங்களில் அவர்கள் ஒரு வார்த்தையும் கூறாமல் அமர்ந்திருந்தார்கள். இந்த அமைதியான துக்கவிசாரணை விரும்பத்தக்கதாக இருந்தது, ஆனாலும் அவர்களுடைய போக்கு விரைவில் மாறியது.

**நண்பர்களுடன் கலந்துரையாடல்: 1ம் சுற்று. (3–14)**

3:1-26 *யோபு :* "நான் ஏன் பிறந்தேன்.? நான் ஏன் சாகக் கூடாது.? அதிகம் கனமுள்ள கவிதை மொழியில், தான் பிறக்காமல் இருந்திருந்தால் நல்லது என்று அவர் வெளிப்படையாகக் கூறினார். அல்லது பிறந்தவுடனே மரித்திருக்கலாம் என்றும் கூறினார். தன்னுடைய பிரயோசனமற்றதும், துன்பமான வாழ்வைப்பற்றியும் எண்ணியே இவ்வாறு கூறினார். கர்த்தர் ஏன் தன்னை சாகாமல் பாதுகாக்கின்றார் என்றும் அங்கலாய்த்தான். (3:20-26)

4:1-11 ***எலிப்பாஸ்:*** கபடற்றவர்கள் துக்கப்பட வேண்டியதில்லை. ஆனால்....... யோபுவின் அங்கலாய்ப்பை கவனித்த எலிப்பாஸ் தன்னுடைய வெளிப்படுத்தலை இவ்வாறு கூறுகின்றார். யோபுபின் நிலையை ஆவிக்குரிய தலைவன் என்று ஏற்றுக் கொள்கின்றார். (4:3-4) அவர் தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்துகின்றார், உண்மையில் கபடற்றவர்கள் யோபுவைப் போல் துன்பப்படத் தேவையில்லை, (4:7)இ யோபு தன்னுடைய பாவத்தினாலேயே துன்பப்படுகிறார்.

4:12-21 **கபடற்றவர்கள் எப்படி இருப்பார்கள்.?** எலிப்பாஸ் தான் கனவில் கற்றுக் கொண்ட ஒரு உண்மையை சொல்ல முனைகிறார், பரலோகத்தில் உள்ள எல்லாத் தூதர்களும் கபடற்றவர்களாய் இருந்தால், எப்படி ஒரு மனிதன் கபடற்றவனாக இருக்க முடியும்? மீண்டும், யோபு தன்னுடைய பாவத்தின் நிமித்தமே துன்பம் அனுபவிக்கிறான் என்றான்.

5:1-16 **'நான் என்ன செய்வேன்'** துன்பப்படுதலை பற்றிய குற்றச்சாட்டுக்களை கவனித்த பிற்பாடு, (5:1-5) பிற்பாடும் அவர் மீண்டுமாக பாவத்தினாலேயே இந்தத் துன்பம் வந்தது என்று

கூறினார். (5:6-7) எலிப்பாஸ் யோபுவை மனம் திரும்பும் படியும் வேண்டிக் கொண்டான். (5:8-16).

5:17-27 **அவருடைய ஒழுக்க முறமையை வெறுக்க வேண்டாம்.,** அவருடைய துன்பங்கள் ஒழுங்கு படுத்துவதற்காகவே கர்த்தரிடமிருந்து வந்தது என்று, எலிப்பாஸ் யேபுவுக்கு உறுதிப்படக்கூறினார், அவ்வாறு செய்தால் திரும்பவுமாய் செல்வமும், சுகமும் உண்டாகும் என்றும் கூறினார். இது ஒரு வலுவான கொள்கையாக இருந்த போதிலும், (எபிரே. 12:5-11) யேபுவின் நிலமையில் இது ஒரு தவறான முடிவாகும்.

6:1-13 **யோபுவின் பிரதிபலிப்பு** :- எப்படி என்னுடைய துயரத்தை நீ அறிவய்? துக்கமான முறைப்பாட்டை கவனித்த பின்பு யோபு பிரதிபலிப்பாக கூறுகின்றார். தன்னுடைய தனிப்பட்ட துயரத்தின் ஆழத்தை அவரால் நிதானிக்க முடியவில்லை. ஒரு மிருகத்தைப் போல தனக்கு உணவு சரியில்லை என்று முறைப்பாடு செய்ய முடியுமோ? (6:5-7). மரணமே அவருக்கு எஞ்சி இருக்கிற நம்பிக்கையாக இருக்கின்றது. (6:8-13).

6:14-21 **நண்பர்கள் வற்றிய நீரூற்றுக்கள் போலிருக்கின்றார்கள்**. யோபு தன்னுடைய நண்பர்களின் ஆறுதலில் அமர்ந்திருந்தான். ஆனால் அவர்களோ இவரை அவமதித்துப் பேசுகிறார்கள். அவர்கள் வறண்டுபோன ஆறுகள்போல இருக்கிறார்கள். அதிலிருந்து ஒரு களைத்துப் போன பிரயாணி தண்ணீரை எதிர்பார்த்தான், ஆனால் ஏமாற்றமே கிடைத்தது.

6:22-30 **நான் எங்கு தவறினேன் என்பதைக் கவனியுங்கள்.** யோபு நண்பர்களிடம் சரீரப்பிரகாரமான உதவியோ அல்லது பொருளாதார உதவியோ கோரவில்லை, அவர்களுடைய இரக்கத்தையே எதிர்பார்த்தார். இப்போது அவர், அவர்களுடைய குற்றச்சாட்டுக்களையே கேட்கிறார். என்ன குறிப்பிட்ட பாவம் தனக்கு இந்த துயரத்தை கொண்டுவந்தது என்று அங்கலாய்கிறார்.?

7:1-21 **அவருடைய எதிர்பும் துயரமும்**. இந்தத் துயரத்தின் முடிவு என்ன என்று அறியாதிருக்கிறான். இதிலிருந்து இழைப்பாறுவதற்கே

அவரால் முடியவில்லை. எல்லா நம்பிக்கையும் முகில் போல் மறைந்துவிட்டது. அதனால் அவர் கர்த்தருடன் போராடினான். (7:11): ஏன் கர்த்தர் அவரைத் துயரப்படுத்து ஒடுக்குகிறார்? ஏன் அவர் கெட்ட கனவுகளால் யோபுவை வாதிக்கின்றார்? ஏன் அவர் தெடர்ந்தும் யோபுவைச் பரீட்சிக்கின்றார்? யோபு பாவம் செய்திருந்தால் ஏன் அவரை மன்னிக்க முடியாது, ?

8:1-7 **பில்தாத். உம்முடைய வாயின் வார்த்தைகள் பலமான காற்றைப்போலிருக்கும்**? **பில்தால்**, இரண்டாம் நண்பர் பேசுகிறார். பொறுப்பில்லாமல் யோபு பேசுவதைக் கண்டிக்கின்றார். தன்னுடைய சொந்த நீதியைக் கர்த்தருடைய பூரண வெளிச்சத்தில் காண்பிக்க முயற்சிக்கின்றார். எலிப்பாசைப் போலவே பில்தாத்தும் யோபு தன்னுடைய பாவத்தினாலேயே துயரப்படுகின்றார் என்று இவர்மீது குற்றங்களைச் சுமத்துகின்றார்.

8:8-22 **பாவிகளுக்குத் தடையும் நீதிமான்களுக்கு கனமும் உண்டாவதாக.** பில்தாத், சரித்திரத்தையும் இயற்கையையும் அடிப்படையாகவைத்து விவாதிக்கின்றார், (8:8-19) அதாவது பாவம் தண்டனையைக் கொண்டுவரும். கர்த்தர் பாவிகளுக்கு உதவி செய்வதில்லை என்றும், நீதிமான்களுக்கு உதவி செய்கிறார் என்ற முடிவிற்கும் வந்தார். (8:20-22). மீண்டுமாக யோபுவின் பாவமே அவருக்கு இந்தத் துயரங்களைக் கொண்டுவந்துள்ளன என்றும் அவர் மனம் திரும்பவேண்டும் என்ற முடிவிற்கே வந்தார்கள்.

9:1-13 **யோபுவின் மறு மொழி**.: கர்த்தரின் அதிசயமான செயலை கூறுகின்றார். கடலின் மேல் நடக்கிறார்.(மத்:14:25-26) நீர் சொல்வது சரியே, ஒரு மனிதனும் கர்த்தருடன் விவாதிக்க முடியாது. பில்தாத்தின் குற்றச்சாட்டை யோபு ஏற்றுக் கொண்டார், பாவமுள்ள ஒரு மனிதனும் கர்த்தருடன் விவாதிக்க முடியாது. இப்படியிருக்க அவருக்கு மறுமொழி கொடுக்கவும் அவரோடே வழக்காடும் வார்த்தைகளைத் தெரிந்து கொள்ளவும் நான் எம்மாத்திரம்? நான் நீதிமானாயிருந்தாலும் அவரோடே வழக்காடாமல் என் நியாயாதிபதியினிடத்தில் இரக்கத்துக்குக் கெஞ்சுவேன். கர்த்தரின் செயலைக் கூறுகின்றார் கடலின் அலைமேல் நடக்கிறார். மத்:14: 25-26

9:14-31 பாவிகள் கர்த்தருக்கு முன்பாக நிற்கவே முடியாது. ஒருவன்

தன்னை நீதிமான் என்று கூறும்போதிலும் (9:21) கர்த்தர் தன்னை நியாந்தீர்ப்பார் என்பதை யோபு ஏற்றுக் கொண்டார். ஆனாலும் தற்போது உள்ள நிலமை நம்பிக்கை இல்லாத் தன்மையை ஏற்படுத்தியது. அதனால் கர்த்தர் பாரபட்சம் பார்க்கிறார் என்றுயோபு கூறத் தொடங்கினார். (9:22-24).

9:32-35 **உதவி தேவைப்பட்டது**. மத்தியஸ்தம் செய்வோர் தேவைப்படுகிறார்கள்.  கர்த்தருடன் நியாயம் போசுவதற்கான ஒரு மத்தியஸ்தருக்காக யோபு காத்திருந்தார், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்த்து அப்படியான மத்தியஸ்தர் என்று கூறுகின்றது. (1திமோ. 2:5).

10:1-22 **கண்டணம் பெறுவதற்காகவா உருவாக்கப்பட்டேன்**? யோபு தன்னுடைய துயரங்களுக்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்பினான், கர்த்தருடைய பெரிய கிருபையினால் தற்போதைய துக்க நிலமை விரைவில் மாறும் என்று கர்த்தரில் நம்பிக்கையாக இருந்தான். (10:8-17). இப்படியான துக்கத்தில் நான் உழல்வேன் என்றால், ஏன் கர்த்தர் என்னை உருவாக்கினார் என்று ஆச்சரியப்பட்டான். 10:18-22).

11:1-12 சோப்பார்: இவ்வாறான பேச்சைப் பேசுவதற்கு நீ துணிந்தது என்ன? யோபுவின் மூன்றாவது நண்பன் சோப்பார் வினாவுகிறார். கர்த்தருடன் யோபு இப்படிப் பேசுவதைப் பார்த்து சோப்பார் பயப்படுகிறார். கர்த்தர் யோபுவுக்கு முன்பாகத் தோன்றி, இப்போது அவர் அனுபவிக்கும் துன்பங்களைவிட இன்னும் அதிக துன்பத்தைக் கர்த்தர் கொடுக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். (11:5-6)!

11:13-20 **என்னுடைய ஆலோசனை**: உன் பாவத்தை அறிக்கைசெய், என்று சோப்பார் யோபுவுக்கு ஆலோசனை வழங்கினார், இதே போலவே எலிப்பாசும் பில்தாத்தும் கூறியிருந்தார்கள். மனம்திரும்பி கர்த்தரிடம் மன்னிப்பைப் பெற்றுக் கொள். என்று மூன்று ஆறுதல் அளிப்பதற்காக வந்த நண்பர்களும், கூறுகின்றார்கள். என்ன பாவம் என்று இவர்களில் ஒருவரால்கூட கண்டுபிடிக்க முடியவில்லை.

12:1-12 **யோபுவினுடைய மறுமெழி**: உங்களைப்போல எனக்கும் புத்தியுண்டு. சோப்பருக்குக் கொடுத்த மறுமொழியானது, உண்மையில் மூன்றுபேருக்கும் கொடுக்கப்பட்ட மறுமொழியாகும்.

அவர்களுக்கு அதிகம் ஞானம் உண்டு என்பதைத் தெரிவிக்கும் வண்ணமாக வசைபாடும் மொழியிலே அவர்களுக்கு பதில் கொடுத்தார். அவர்களுடைய மனப்பாங்கை அறிந்து தன்னையும் அவர்களிலும் மேன்மையானவன் என்று எண்ணினான். (12:3-6). உண்மையில் மிருகங்கள் கூட இப்படியான சம்பவங்களை அறிந்து கொள்ளுமே என்று யோபு கூறினார்.

12:2-3 **தானறிந்தவற்றையே தன் நண்பர்கள் சொல்லுகிறார்கள் என்பதை வெளிப்படுத்தினார்.**

12:13-25 கர்த்தர் எல்லாம் அறிந்தவர், எல்லாம் வல்லவர். கர்த்தர் மாத்திரம் எல்லாம் அறிந்தவரும், எல்லாம் வல்லவருமாயிருக்கின்றார். என்று யோபு கூறினார். ஆகவே பாவத்தைப்பற்றிய கேள்விகளுக்கு அவரிடமே பதில் உண்டு. துன்பமும் நீதியும் அவரிடத்திலிருந்து வரும்.

13:1-12 **சரியான தெரிவு. மௌனம்**. கர்த்தருடைய வல்லமையையும், ஞானத்தையும் எண்ணும் போது, அவரின் ஆறுதல் நண்பர்கள் யாவரும் மௌனமாகவே இருக்க வேண்டும் என்று யோபு கூறினார். கர்த்ருக்காக அவர்கள் பேசுவதற்கு முன்வரவில்லை. இவ்வாறாக தனக்கு கரைச்சல் தரும் நண்பர்களை கர்த்தர் நியாயம் தீர்ப்பார் என்று யோபு எதிர்பார்த்தான். (13:10-11) கடைசியில் அவர் அதைச் செய்தார். (42:7-9).

13:13-19 **நான் நீதியாகவே இருக்கிறேன், ஆதலால் எனக்காக நானே வழக்காடுவேன்.** யோபு தற்போதுள்ள நிலை மரணத்துக்கு ஏதுவாக இருந்தபோதிலும், கர்த்தர்மீதுள்ள விசுவாசத்தைக் காண்பித்தார். (13:15). இன்னமும், கர்த்தர் தன்னை நீதிமானாகக் காண்பிப்பார் என்று எதிர்பார்த்தான் (13:15-16). இந்தக் காட்சி நீதிபதியின் அறையில் நடப்பதுபோலக் காட்சியளிக்கின்றது, யோபு நீதிபதியிடம் மன்றாடுவதுபோல அந்தக் காட்சி அமைகின்றது.

13:20-25 **இரண்டு காரியங்களை மாத்திரம் எனக்குச் செய்யாதிருப்பீராக** கர்தருடைய சமூகத்தில் நல்ல விடயங்களை கேள்பேன் என்று யோபு உணர்ந்தான், இந்த இரண்டு விடயங்களிலும் கர்த்தர் தன்னைத் தப்புவித்தால், உம்முடைய

கையை என்னை விட்டுத் தூரப்படுத்தும் உம்முடைய பயங்கரம் என்னைக் கலங்கப் பண்ணாதிருப்பதாக.

13:26-28 **மகா கசப்பான தீர்ப்புகளை என்பேரில் எழுதுகிறீர்.** தன்னுடைய வாலிப காலத்தில் செய்த குற்றங்களுக்குத் தண்டனை தருகிறாரோ என யோபு ஆச்சரியப்பட்டான். சின்னக் குற்றங்களுக்கு பலி செலுத்தி பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுவார். (1:5).

14:1-6 **சில நாள்கள், ஒரு சுகமும் இல்லை.** ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான். அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்கிறான் நிழலைப்போல நிலைநிற்காமல் ஓடிப்போகிறான். மிகுதியாக இருக்கும் சில நாட்களிலாவது, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இல்லாமல் வாழ முடியாதா என்றும் அங்கலாய்க்கின்றான்.

14:7-22 **நான் ஓர் மரத்தைப்போல் இருக்ககூடாதா**? ஒரு மரம் வெட்டி வீழ்த்தப்பட்டார், அதனுடைய வேரானது அந்த மரத்துக்கு ஜீவனைக் கொடுத்து திரும்பவும் அது முழைத்து ஒருமரமாக மாறுகின்றது, ஆனால் மனிதர்கள் அப்படியல்ல, ஒருமுறை மரித்தால் அவர்கள் மீண்டும் உயிர்பெறுவது இல்லை என்று யோபு கூறினார். (14:10-12). மரணத்திற்குப்பின்பான ஒரு வாழ்வு உண்டென்பதை யோபு ஏற்றுக் கொள்கின்றான். (14:14-15) ஆனால் இதனைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கை அதிகம் இல்லாதிருந்தது. இந்த உடலிலிருக்கும் வரை மனிதனுக்கு வேதனை துன்ப துயரங்கள் உண்டு.

**நண்பர்களுடனான கலந்துரையாடல் : 2ம் சுற்று. (15–21)**

15:1-16 **எலிப்பாஸ்:** நீர் ஒரு வெற்றுப்பாத்திரம். நீர் ஞானவானுமல்ல. எலிப்பாஸ் மீண்டுமாகப் பேசுகிறார். யோபு வெறும் வார்த்தைளைப் பேசுகிறார் என்று குற்றம் காண்கின்றார்கள். எலிப்பாசின் பார்வையில், ஞானவான்கள் தங்களுக்கு ஏற்படும் நியாயத் தீர்ப்புக்களில் தொடர்ந்தும் அமைதிகாக்க மாட்டார்கள்.

15:17-35 **பாவிகள் எப்போதும் துன்பப்படுவார்கள்**. ஞானவான்கள்,

பாவம் துன்பத்தைக் கொண்டுவரும் என்று முழுவதுமாக நம்புகின்றார்கள். சரித்திரமும் அதை நிரூபிக்கின்றது. இதற்கான பல உதாரணங்களை அவர் கூறுகின்றார். அவர் ஒரு சரித்திர சம்பந்தமான நிகழ்வுகளைக் கூறுகிறார். அவர் சொத்துக்கள் இழப்புக்கள் பற்றிக் கூறினார். (15:29). திரும்பவும் அவர் யோபு தன்னுடைய பாவத்தினாலேயே துன்பப்படுகிறார் என்று கூறினார். சொத்துக்கள் எப்போதும் கர்த்தரின் ஆசீர்வாதத்தினால் உருவாவதில்லை. (லூக் 16:19-31 யாக் 5:1-6)

16:1-17 **யோபுவின் பிரதியுத்தரம்**: நீங்கள் உங்களை ஆறுதல் படுத்துபவர்கள் என்று கூறுகின்றீர்கள். யோபு எலிப்பாசுக்கு கூறியதில் தன்னுடைய வெறுப்பையே காண்பித்தார். அவரின் நண்பர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் உண்மையில் ஆறுதல்படுத்துபவர்கள் அல்ல. அவர்கள் செய்யும் செயல்களை யோபுவினால் கண்டிக்க முடிகின்றது. (16:5). அவர் தன்னுடைய நண்பர்களுக்கு எதிராக முறைபாடுகள் செய்தபோதிலும்,யோபு கர்த்தர்மீதும் கோபம் அடைகின்றார். (16:11-14).

16:18-22 பரலோகத்தில் பரிந்து பேசுபவர் உண்டா? ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறதுபோல தேவனோடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்.( 9:32-35, 19:23-29).

17:1-9 **பிழையானது தோல்வி காணும், சரியானது வெற்றியடையும்.** விரைவில் மரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் யோபு தன்னுடைய கடபற்ற தன்மையை வாதாடுகின்றார். நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான் சுத்தமான கைகளுள்ளவன் மேன்மேலும் பலத்துப்போவான்(17:8-9).

17:10-16 "மரணம்தான் என்னுடைய ஒரே நம்பிக்கை".
பாவத்தினாலேயே ,யோபுவிற்குத் துக்கங்கள் ஏற்பட்டன, அதனால் அவர் மனம்திரும்ப வேண்டும் என்று மூன்று நண்பர்களும்

கூறினார்கள், யோபு தான் பாவம் செய்யவில்லை என்பதால், இந்தத் துயரத்திலிருந்து தப்புவதற்கு மரணமே ஒரே வழியாகும் என்று காத்திருந்தார்.

18:1-21 **பில்தாத்:** இது நியாயமானதாக இருக்கட்டும். பாவிகள் மட்டும் துன்பப்படுவார்கள். பில்தான் தன்னுடைய பேச்சை ஆரம்பிக்கும் போது, யோபு ஒரு வார்த்தையும் கூறாமல் இருந்தால் நல்லது என்று கூறினார். யோபு தன்னுடைய துக்கத்திற்கு தன்னை நியாயப்படுத்தும் நிலையை தவறானது எனக் கூறினார். யோபு பாவம் செய்தார் என்பதையே மீண்டும் வலியுறுத்தினார்.

19:1-12 **யோபுவின் பிரதியுத்தரம்**. நீங்கள் நியாயமற்றவர்கள், அப்படியே அவரும். யோபு தன்னுடைய நண்பர்களை நியாயமற்ற தன்மையையும், கொடூரத் தன்மையையும் குற்றப்படுத்தினார். அவர் கர்த்தரும் பாரபட்சமாக இருக்கின்றார் என்றும் குற்றப்படுத்தினார். அத்துடன் தனக்கு ஏற்பட்ட வேதனைகளையும் வரிசைப்படுத்திக் கூறினார். (19:6-12).

19:13-22 குடும்பத்தாராலும் நண்பர்களாலும் கைவிடப்படல். யோபு தனிமையில் தன்னுடைய நன்பர்களைக் கவனித்து, நெருங்கிய நண்பர்கள்,நெருக்கமகப் பழகியவர்கள், இளம்பிள்ளைகள், வேலைக்காரர் என்பவர்களைக் கவனித்துக் குளறி அழுதான். இதற்கு மேலாக அவருடைய சரீரதுக்கம் அதிகமாக அதிகரித்தது. இவை எல்லாவற்றின் நிமித்தம், நண்பர்களிடம் இரக்கத்தை வேண்டிநின்றார். (19:21-22).

19:23-29. **என்மீட்பர் உயிரோடு இருக்கிறார் என்பதை நான் அறிவேன். அவர் தன்னுடைய வெறுப்பின் மிகுதியால், விசுவாசத்தின் உச்சிக்கே வந்துவிட்டார், மீட்பு தனக்கு வரும் என்பதை வெளிக்காட்டுகிறார். (**16:18-22).யோபுவின் மீட்பர்

- அவருடைய சொந்த மீட்பராகும் (“என்னுடைய ” 19:25)

- உயிரோடு இருக்கும் மீட்பர் (19:25)இ கிறிஸ்த்து உயிர்தெழுந்ததைக் குறிப்பிடுகின்றது

- யோபுவின் விடுதலைக்காக, நியாயப்பிரமாணத்திற்கிணங்க அவருக்குரிய கிரயத்தைக் கொடுக்க ஒருவர் இருக்கிறார். .(19:25 லேவி. 25:25-55)

- இறுதி நாட்களில் மீட்பர் உலகில் இருப்பார் (19:25) இது கிறிஸ்த்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கின்றது.

- மரணத்திற்குப்பின்பு ஒரு வாழ்வு உண்டு என்பதை ஆதாரமாகக் கொண்டு யோபு பேசுகின்றார். (19:26(ஏசா. 26:1-19)

- ஒருவருக்கூடாக யோபுவை கர்த்தர் விடுவிப்பார். (19:27 ,42:10-17) விசுவாசித்ததனால், யோபு தன்னுடைய மூன்று நண்பர்களும் கர்த்தரின் நியாயத்தீர்ப்புக்கு உட்படுவார்கள் என்று எச்சரிக்கின்றார். (19:28-29, 42:7-9). தன்னுடைய துக்கங்களும், பரிதவிப்பும், எதிர்கால சந்ததியினருக்காக பதிவுசெய்யப்படும் என்று யோபு கூறுகின்றார். (19:23-24)

20:1-29 **சோபார்.** அதிக குறை கூறலும், அதிக குற்றம் கூறுதலும். சோப்பார், யோபு தன்னுடைய நண்பர்களை கடிந்து கொண்டதற்காக தன்னுடைய இரண்டாம் பேச்சை ஆரம்பிக்கின்றார். இவரும் எலிப்பாசும், பில்தாத்தும் பாவங்களை வரிசைப்படுத்தியது போல இவரும் வரிசைப்படுத்தி அதற்கான நியாயத்தீர்பும் கிடைக்கும் எனக் கூறுகின்றார். அவர்களைப் போலவே யோபுவின் பாவத்திற்காகவே அவர் இந்தத் துன்பங்களை அனுபவிக்கின்றார் என்று கூறுகின்றார். 20:11 மரணத்தின் பின் உடலின் பாகங்கள் அழுகியபிற்பாடும் பாவம் எழும்போதிருக்கும். இயேசுவின் இரத்ததால் கழுவப்பட்டால் மீட்புண்டு.

21:1-34 **யோபுவின் பிரதியுத்தரும்** :- அவருடைய பட்டியலும். தன்னுடைய நண்பர்களின் வாதமும் முரண்பட்டபடியால், பாவிகள் தங்கள் பாவத்திற்காக தங்கள் வாழ்க்கையில்

தண்டிக்கப்படுவார்கள் என்ற வாதம் பிரச்சனையாகவே உள்ளது. கெட்டவர்கள் எப்படி விருத்தியடைந்திருக்கிறார்கள் என்பதை உதாரணங்களுடன் யோபு விளக்கினார். (21:7-16). அவர்கள் வாழ்விலும் சாவிலும் கனப்படுத்தப்படுகின்றார்கள், (21:31-32) இவ்வாறான விடயங்களில் அவர்களுடைய நண்பர்கள், பெற்றோரின் பாவத்திற்காகப் பிள்ளைகள் தண்டிக்கப்படுகின்றார்கள் என்று கூறுகின்றார்கள். அது அப்படியாயின் அந்த கெட்ட பெற்றோர் நேரடித் தண்டனைக்குத் தப்பிவிடுகின்றார்கள். (21:18-21) அப்படிப்பட்ட வாதத்தினால் கெட்டவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள். என்பது முழுவதும் பொய்யாகும். (21:34). மனந்திரும்பாதவர்கள் செழிப்பாக வாழ்ந்தாலும் அதற்குரிய தண்டனையை மரணத்திற்கு பின் பெற்றுக்கொள்வார்கள்.

**நண்பர்களுடன் கலந்துரையாடல். : 3ம் சுற்று (22–31)**

22:1-5. **எலிப்பாஸ் :- நான் மீண்டும் சொல்கிறேன்.** நீர் துன்பம் அனுபவிப்பது உம்முடைய பாவத்தினாலாகும். மூன்றாம் முறை பேசுகிறார். எலிப்பாஸ் தன்னுடைய நண்பர்களான பில்தாத், சோப்பார் என்பவர்களின் எண்ணப்படியே பாவத்தினாலேயே மக்கள் துயரப்படுகின்றார்கள் என்ற முடிவிற்கே வந்தார்கள். அப்படியல்லவென்றால், ஜனங்களின் நற்செய்கைகள் கர்த்தருக்கு முன்பாக பெறுமதியற்றவைகளாகும் என்று எலிப்பாஸ் கூறினான். யோபு அனுபவித்துவரும் பெரும் துயரமானது அவருடைய பெரிய பாவத்தினாலேயே உண்டாயிற்று என்று கூறினார்

22:6-20 **யோபுவின் பாவங்கள் என வகுக்கப்பட்டவைகள்**. யோபு செய்த பாங்கள் என்னவென்று எலிப்பாசிற்குச் சரியாகத் தெரியாத போதும், அவர் சில தரவுகளைக் கொடுத்தார், உதவி செய்ய வேண்டியவர்களுக்கு உதவாமல் விட்டதையும் குறிப்பிட்டார். எதிர்க்கும் குணத்தையும் சுட்டிக் காண்பித்தார். (22: 6 --20)

22:21-30 **பரிந்துரை செய்யப்பட்ட தீர்வு**:- மனம்திரும்புதல். எலிப்பாசின் பார்வையில் இதன் முடிவு இலகுவானதாகவே இருக்கிறது. யோபு

தன்னுடைய பாவங்களுக்காக மனம்திரும்பி கர்த்தர் பக்கமாக வரவேண்டும். அப்போது, கர்த்தரின் இரக்கத்தினால் திரும்பவும் கர்த்தரின் இரக்கத்தின் சந்தோசத்தை அனுபவிக்க முடியும். யோபுவின் மீது எலிப்பாஸ் கொண்டுள்ள அபிப்பிராயம் கர்த்தரின் பார்வையில் தவறானதாகக் காணப்பட்டது. (1:8 2:3) எலிப்பாசின் குற்றச்சாட்டுகளுக்கு உடனடியாக யோபு பதில் கொடுக்காமல் விட்டபோதிலும் பின்பு அதற்கான நீண்ட சுயபாதுகாப்புக்கான பதிலைக் கொடுத்தார். (29–30).

23:1-17 **யோபுவின் பதில் :-** நான் அவரைக் குறிப்பிட்டுக் கூறுவேனானால் அவர் மௌனமாக இருக்கவேண்டும். யோபு கர்த்தரைக் கண்டு அவருக்கு முன்பாக தன்னுடைய வேண்டுதலை முன்வைக்க விரும்பினார். அப்படி கர்த்தரைச் சந்திப்பது தான் தப்புவதற்கான ஒரு வழியாக அமையும் என யோபு நம்பினான். (23:10-12). அப்படியிருந்தும், கர்த்தர் சர்வ வல்லவர் என்பதை அவர் அறிந்திருந்தார். (23:13-14) அதனால் அவரைச் சந்திக்கப் பயந்தான்(23:15-17).

.

24:1-17. **கர்த்தர் இல்லாத** மனிதன் செழிபாயிருக்கிறான். கர்த்தர் இல்லாதமனிதர்கள் பாவங்களை எப்படி கர்த்தர் கவனிக்காமல் விடுகிறார், அவர் ஆசீர்வாதமாக ஜீவிக்கின்றான்.

24:18-25. **ஆனாலும் ஒரு நொடிப்பொழுதில் அவன் விழுந்து மறக்கப்படுகிறான்**.!. கெட்டவர்கள் விருத்தியடைந்த போதிலும், கர்த்தர் அவர்களுடைய பாவங்களை காணாதிருந்த போதிலும் யோபு கர்த்தர்மீது திட நம்பிக்கையுடன் இருந்தான், கர்த்தர் ஒருநாள் அவர்களைத் தண்டிப்பார். யோபுவின் ஒரே நம்பிக்கை நீதிமானாக இருந்தாலும் அநீதிமானாக இருந்தாலும், மரணத்திற்கு யாரும் தப்பவே முடியாது என்பதாகும். (24:20-24).

25:1-6. **பில்தாத்:- பில்தாத்தின் மூன்றாவது பேச்சு சிறியதாகவும்**

**அர்த்தமுள்ளதாகவும் இருக்கிறது. கர்த்தர் சர்வ வல்லமையுள்ளவர், அவருடைய தூதர்களால் சான்று பகரப்பட்டவர். (**25:3) அவர் இயற்கையை வெளிச்சத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர். (25:3). சந்திரனோ, நட்சத்திரமோ, ஒன்றுமே அவருடைய பரிசுத்தத்தை கொண்டிருக்கவில்லை. நட்சத்திரங்களுடன் ஒப்பிடும்போது மனிதர்கள் புழுவைப் போலவே உள்ளார்கள், அப்படியானால், யோபு தன்னை நீதிமானாக எப்படிக் கூறமுடியும். ? மனிதன் பாவமுள்ளவன் என்று பில்தாத் கூறுவது சரியாகும், யோபுவின் கேள்வியாகிய ஏன் கபடமற்றவன் துயரப்படுகிறான் என்ற கேள்ளிக்கு விடையாக பில்தாத்தின் விவாதம் தவறானதாகத் தோன்றுகின்றது

26:1-4 **யோபுவின் பதில்:- ஏளனம் செய்தல்.** பில்தாத்தின் ஏளனம் செய்யும் கேள்விகளுடன் யோபு தன்னுடைய நீண்ட பேச்சைத் தொடங்கினார். (26–31), ஒரு நல்ல ஆலோசனைக்காரனாக இருப்பவர், ஏன் தேவையுள்ளவனைக் கவனத்தில் எடுக்கவில்லை.

26:5-14 **இயற்கையின் மகிமையானது கர்த்தரின் வல்லமையின் நிழலாகும்.** யோபு படைப்பின் மகிமையைக் குறிப்பிட்டிருந்தார். பூமி அந்தரத்தில் தொங்குகின்றது என்பதை விஞ்ஞான வளர்ச்சியடையா காலத்திலேயே யோபு கூறினார். வெளிப்படுத்தினார், அதனை பில்தாத்தும் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். (25:5], இங்கு கர்த்தருடைய சிறிதளவு வல்லமை வெளிக்காட்டப்பட்டிருந்தது. (26:14). கர்த்தர் தன்னுடைய மகாபெரிய வல்லமையை வெளிப்படுத்துவதற்கு படைப்பின் மகிமையையே பயன்படுத்தினார். (38–41).

27:1-6 **யோபுவின் பொருத்தனை**.: துன்பத்திலும் கர்த்தரை ஆராதித்தல். கர்த்தரிடம் இருந்து நியாயத்தீர்ப்பு வந்தபடியால் துன்பத்தை அனுபவிக்கிறேன், ஆனாலும் என்னுடைய நேர்மையிலும், உத்தமத்திலும் உண்மையாயிருப்பேன் என்று விசுவாசத் தின் உச்சத்திலே யோபு நிற்கிறார்.

27:7-23 **தன்னுடைய நண்பர்களுக்கான எச்சரிக்கை**. யோபு தன்னுடைய நண்பர்கள் மேல் கர்த்தரின் நியாயத் தீர்ப்பு வரும்படி கர்த்தரை வேண்டிக் கொள்கிறான். (27:7) அத்துடன் கர்த்தர் எப்படி நியாயம் தீர்ப்பார் என்பதையும் விளக்கிக் கூறுகிறார். (27:8-23). அவர் தன்னுடைய மூன்று நண்பர்களையும் மனதில்வைத்தே இந்த வார்த்தைகளைக் கூறியுள்ளார்.

28:1-28 **மகிழ்சியற்றவனுடைய கர்த்தரின் பயம் ஞானத்தைக் கொண்டுவரும்**. கர்த்தருடைய வழிகளை அறிந்து கொள்ள முடியாத. மனிதர்களுக்கா யோபு தியானம் செய்யத் தொடங்குகிறார். ( ஏசா. 55:8-9). மனிதர்கள் அதிகமான தெய்வீக திறன்களைத் தன்னகத்தே கொண்டுள்ளார்கள். (28:1-11). ஞானம் மறைபொருளாக இருப்பதால் அதனை யாரும் விலைகொடுத்து வாங்க முடியாது(28:20-21). கர்த்தர் தாமே பூரண ஞானத்தைக் கொண்டுள்ளார். அதனால் கர்த்தருக்குப் பயப்படுவோர் கர்த்தரிடமிருந்து ஞானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் (28:28 நீதி. 1:7 9:10). யோபுவின் நிலமையில் இதை யோசிப் போமானால், துக்கப்படுவோர் துக்கத்திலும் கர்த்தரைத் தேடுதல்வேண்டும். காற்றுக்கு நிறையுண்டு என்பதையும் அறிவியல் வளர்ச்சிக்கு முன்பே 28:25ல் யோபு சொன்னார்.

29:1-25 **அவர் செய்த யாவற்றிற்குமாக அவர் கனம்பண்ணப்பட்டார்.** யோபு நீண்ட சுய பாதுகாப்பான விரிவுரை செய்தார், அவர் தான் முன்பிருந்த நல்ல நிலமையை நினைவு கூர்ந்தார், அவரது நல்நடத்தையினால் கனம்பண்ணப்பட்டதை நினைவு கூர்ந்தார். (29:1-11) அத்துடன் நல்ல செயல்களுக்காகவும் கனம்பண்ணப்பட்டார். (29:12-25).

30:1-14. **ஆனால் இப்போது, தன்னுடைய சீடர்களினால்கூட வெறுக்கப்படுகின்றார்.** ஆனால் தற்போது சகலரும் இகழ்கின்றார்கள். ஆனாலும் இப்போது நான் அவர்களுக்குப் பாட்டும் பழமொழியும் ஆனேன்.

30:15-31 **முடிவில்லாத துக்கம், விடையில்லாத ஜெபம்:** யோபுவின் துக்கமும், சரீர நோவுகளும் விடுதலை வேண்டி ஜெபம் செய்வதற்கு வழிநடத்தியது,. ஆனால் கர்த்தர் அந்த ஜெபங்களைக் கேட்கவில்லை(30:15-20).ஆனால் திரும்பவுமாய் கர்த்தரோடு போராடுகின்றார். தனக்கு ஏற்பட்ட துன்பங்களை கூறி போராடுகின்றார். நன்மைக்குக் காத்திருந்த எனக்குத் தீமை வந்தது வெளிச்சத்தை வரப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது. என் குடல்கள் கொதித்து அமராதிருக்கிறது உபத்திரவ நாட்கள் என்மேல் வந்தது. (30:21-31).

31:1-40 **நான் பாவம் செய்திருந்தால், என்னைத் தண்டியும். :யோபு** பாவங்களின் பெயரை எழுதி ஒருபெரிய பட்டியலைத் தயாரித்து, தன்னுடைய நண்பர்களுக்கு அதனைக் காட்டி, இதில் எந்தக் குற்றத்தை நான் செய்திருக்கிறேன் என்று வினவுகிறார். இவரின் பட்டியல் எலிப்பாசினால் தயாரிக்கப்பட்ட பட்டியலைவிட விசாலமானதாக இருந்தது. (22:6-20) ஆ என் வழக்கைக் கேட்கிறவன் ஒருவன் இருந்தால் நலமாயிருக்கும் இதோ சர்வவல்லவர் எனக்கு உத்தரவு அருளிச் செய்யவும் என் எதிராளி தன் வழக்கை எழுதிக்கொடுக்கவும் எனக்கு விருப்பமுண்டு. அதை நான் என் தோளின்மேல் வைத்தது எனக்குக் கிரீடமாகத் தரித்துக் கொள்வேனே. அவனுக்கு நான் என் நடைகளைத் தொகை தொகையாய்க் காண்பித்து ஒரு பிரபுவைப்போல அவனிடத்தில் போவேன். (31:35-37). 31:33 ஆதாமைப் போல் யோபு பாவத்தை மறைத்து வைக்கவில்லை என்று கூறுகின்றார்.

## எலிகூவின் விளக்கவுரை. (32–37)

32:1-22 **எலிகூ, ஒரு கோபமுள்ள இளம் மனிதன்.** எலிகூ, யேபுவைவிடவும் நண்பர்களைவிடவும் வயதில் குறைந்தவர். அவர் அங்கு நிகழும் விவாதத்தை அவதானித்துக் கொண்டிருந்தார். இப்போது அவரும் அதில் கலந்து கொள்கிறார், அவர்கள் மீது கோபத்தைக் காண்பிக்கின்றார், அத்துடன் வயதானவர்கள் எப்போதும் புத்திசாலித்தனமாக இருந்ததில்லை என்றும் கூறுகின்றார். (32:5-9). எலிகூ, யோபு தன்னை உத்தமன் என காண்பிக்க முயலுவதால் அவர்மீது கோபமாகப் பேசுகிறார், அது மட்டுமல்லாமல் யோபுவின் நண்பர்கள்மீதும் அவர் பிழைகள் செய்தார் என்பதை நிரூபிக்காமல் யேபுவை கண்டிப்பதற்காக அவர்கள் மீதும் கோபமாக இருக்கிறார்(32:3இ 10-15). அவர்கள் தோல்வி

யுறுவதைப் பார்த்து, எலிகூ தன்னுடைய கருத்தைக் கூற முயலுகின்றார். (32:16-22).

33:1-7. **நான் உங்களிற்கு நடுநிலை வகிப்பவர்.** எலிகு கர்த்தர் தனக்குக் கொடுத்த ஞானத்தில் நம்பிக்கையாயிருந்தார், அத்துடன் தான் யோபுவின் வழக்கில் நியாயமாக நடந்து கொள்வதாகவும் கர்த்தருக்குமுன்பாக வழக்கை கொண்டுபோவதாகவும் உறுதிப்படுத்திக் கூறினார்.

33:8-13 யோபு பாவியா? செயற்பாடுகள் அல்ல மனப்போக்கு. எலிகூ, யோபு பாவம் செய்துள்ளார் என்று வாதிட்டார், செயலில் அல்ல, ஆனால் மனதில் கர்த்தருக்கு எதிராக என்று கூறினார். (13:24-27 19:11 27:1-6). எலிகூ கொஞ்சம் சரியாகவே கூறினார், ஆனால் விவாதத்தின் கருத்தை அவர் முற்றுமாக மறுத்தார். பாவம்தான் யோபுவின் துயரத்திற்குக் காரணமாம்
33:14-30 **அவர் பல வழிகளில் பேசுகிறார்**. யோபுவின் துக்கத்திற்கு கர்த்தர் மௌனமாக இருக்கின்றார் என்று யோபு கூறுகின்றார். (13:24) அவர் இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே மனுஷருடைய செவிக்குத் தாம் செய்யும் காரியத்தை வெளிப்படுத்தி அதை அவர்களுக்கு வரும் தண்டனையினாலே முத்திரைபோட்டு மனுஷன் தன்னுடைய செய்கையைவிட்டு நீங்கவும் மனுஷருடைய பெருமை அடங்கவும் செய்கிறார். (33:14-18) அவன் தன் படுக்கையிலே வாதையினாலும் தன் சகல எலும்புகளிலும் அகோரமான நோவினாலும் தண்டிக்கப்படுகிறான். (33:19-22) ஒத்தாசை செய்வதற்கு தேவ தூதனும் அனுபப்படுவார். (33:23). இந்த கர்த்தருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுத்தால், அப்பொழுது அவன் மாம்சம் வாலிபத்தில் இருந்ததைப் பார்க்கிலும் ஆரோக்கியமடையும் தன் வாலவயது நாட்களுக்குத் திரும்புவான். (33:24-30).

33:31–34:4. **பேசு, அல்லதுகேட்டுக் கற்றுக் கொள்.** இந்தக் கருத்துக்களைச் செவிமடுக்கும்படி எலிகூ யோபுவைக் கேட்டுக் கொண்டான். அதுமட்டுமல்லாமல் யோபுவின் நண்பர்களையும் அவ்வாறே கேட்டுக் கொண்டான்.

34:5-9 இங்கு அவர் சொல்வது கர்த்தருக்கு எதிராக யோபுகூறிய இரண்டுவிடயங்களை எலிகூ கூறினார். அதாவது கர்த்தர்

நீதியில்லாதவர் (34:5-6) தேவன்மேல் பிரியம் வைக்கிறது மனுஷனுக்குப் பிரயோஜனம் அல்ல(34:9). என்றும் கூறினார். முதலாவது குற்றச் சாட்டிற்கான பதில் 34 ம் அதிகாரத்திலும், இரண்டாம் கேள்விக்கான பதில் 35 ம் அதிகாரத்திலும் கூறப்பட்டுள்ளன.

34:10-37 **உருவாக்கப்பட்டவைகள் உருவாக்கினவரை அவமதிக்க முடியாது.** கர்த்தர் நீதியற்றவர் என்று யோபு கூறியதற்கு, மற்ற நண்பர்களைப் போலவே எலிகூவும் கர்த்தர்பக்கமாக நின்று பேசுகிறார். அதன்படி யோபு பாவம் செய்தார் என்ற முடிவிற்கே அவரும் வந்தார். (34:36-37) கபடற்றவர்களைக் கர்த்தர் துன்பப்பட அனுமதிப்பதேயில்லை. (36:7). அவர் இதனை உறுதிப்படக் கூறினார், இதனை மற்றவர்களும் ஆதரித்தார்கள். யோபு அறிவில்லாதவராக இருந்து கர்த்தரை எதிர்த்துப் போராடுகிறார் என்று கூறினார். (34:34-37). மற்றவர்கள் கூறியது போல எலிகூவும், யோபு பாவம் செய்தபடியால்தான் துன்பப்படுகிறார் என்று கூறவில்லை. எலிகூ, துன்பப்படுவதின் பெறுமதி குறித்துப் பேசினார். 36:5-23).

35:1-16 **நீதிமான் அல்லது பொல்லாதவன்: இருவரையும் அவர் கவனிப்பதில்லை.** யோபுவின் இரண்டாம் பகுதிக்கான விரிவுரை. தன்னுடைய துன்பத்தில் நீதிமானாக இருப்பதினால் இலாபம் ஒன்றுமில்லை என்று யோபு கூறுகின்றார். (35:1-3). எலிகூ அதற்குப்பதிலாக, நல்லதோ கெட்டதோ அது கர்த்தரைப் பாதிக்காது என்று கூறுகின்றார். (35:6-7) நியாயத்தீர்ப்பு அவரிடத்தில் இருக்கிறது ஆகையால் அவருக்குக் காத்துக்கொண்டிரும். (35:14).

36:1-4. **எல்லா விடைகளும் என்னிடத்தில் உண்டு, ஆகாவே காத்திருந்து அவதானியும்.** நான் பேசிமுடியுமட்டும் சற்றே பொறும் இன்னும் தேவன் பட்சத்தில் நான் சொல்லவேண்டிய நியாயங்களை உமக்குச் சொல்லிக்காண்பிப்பேன்.

36:5-23 **உபத்திரபத்தில் அவர் உமக்குப் போதிக்க அனுமதியும்** உபத்திரபத்தையும் பிரச்சனைகளையும் போதிக்கும் உபகரணமாக கர்த்தர் பயன்படுத்துகிறார், அதன்மூலம் கர்தருடன் வாழாதவன் கர்த்தர் பக்கம் மனம்திரும்ப வழியை ஏற்படுத்துகிறார். யோபு இந்த

படிப்பினையை மெதுவாகவே கற்றுக்கொள்கிறார். என்பதைக் கூறுகின்றார். (36:16-23) அத்துடன் இந்த துன்பங்கள் அவரைப் பாவம் செய்ய அனுமதிக்காமல் பாதுகாக்கும்படி உற்சாகப்படுத்துகிறார். (36:21). சில துன்பங்கள் கர்த்தர் பக்கமாக நாம் வரும்படியாக கர்த்தர் அவற்றை ஏற்படுத்துகின்றார். (எபி. 12:5-11)இ

36:24–37:24 **இதோ தேவன் மகத்துவமுள்ளவர் நாம் அவரை அறிய முடியாது.** துன்பங்கள் அதிகரித்தாலும், யோபு கர்த்தரைத் துதிக்கவேண்டும் என்று எலிகூ கூறினார். கர்த்தரின் மகத்துவத்தையும், மகிமையையும்பற்றி எலிகூ கூறினான். யோபுவே இதற்குச் செவிகொடும் தரித்துநின்று தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளைத் தியானித்துப்பாரும். சர்வவல்லவரை நாம் கண்டுபிடிக்கக்கூடாது அவர் வல்லமையிலும் நியாயத்திலும் பெருத்தவர் அவர் மகா நீதிபரர் அவர் ஒடுக்கமாட்டார். (37:23-24). 38:1 யோபுவோடு கர்த்தர் பேசினார், பாடுகள் ஏன் என்று தேவப்பிள்ளகள் கர்த்தரை கேள்வி கேட்பதை விட்டுவிட்டு கர்த்தர் என்னை கைவிடமாட்டார் என்ற விசுவாசத்துடன் பயணிக்க வேண்டும். 40:3-5 கர்த்தர் தன்னுடன் பேச வேண்டும் அவரை கேள்வி கேட்க வேண்டும் என்றிருந்த யோபுவுக்கு கர்த்தர் பேசினதும் மவுனமாயிருந்தார் நல்ல பண்பு.

**கர்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய முக்கியத்துவம். (42:7-17)**

42:7-9 **தவறான ஆலோசனை வழங்கிய குற்றத்திற்காக பலிசெலுத்துதல்**. அவர்களுடைய பொய்யான ஆலோசனையினால், கர்த்தர் எலிப்பாஸ், பில்தாத், சோபார் என்பவர்களுக்கு பலிசெலுத்தும்படியும், யோபுவை அவர்களின் ஆசாரியனாக அனுமதிக்கும்படியும், அவர்களுக்காக ஜெபம் செய்யும்படியும் கட்டளையிட்டார்.

42:10-17 **சுகம் திரும்பக் கிடைத்து, செல்வம் இரண்டுமடங்காக அதிகரித்து, இன்னும் அதிகமான வையும் கிடைத்தன.** அவர் மனம் திரும்பியபடியால், யோபுவின் சுகத்தைக் கர்த்தர் திரும்பவும் கட்டளையிட்டார், ஆரம்பத்தில் இருந்தது போல செல்வத்தினை இரண்டுமடங்காக அருளினார். அவர் மேலும் 140 வருடங்கள்

ஜிவிப்பதற்கும் இன்னும் முன்பிருந்ததைப்போல ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் கட்டளையிட்டார். முடிவில் கர்த்தர் ஏன் யோபு துன்பப்பட்டார் என்பதற்குரிய காரணத்தைக்  கூறவேயில்லை.

## யோபு புத்தகத்திலிருந்து  ஞாபகப்படுத்தப்படும் நபர்கள்.

யோபு

**முக்கிய நிகழ்வுகள்.** : கர்த்தருக்கு முன்பாக சாத்தானால் குற்றம் சாட்டப்பட்டவர். அதிகம் துக்கம் அனுபவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டவர். பின்பு குணமாக்கப்பட்டவர். (1:9-12  2:2-8  42:10)

**மனைவி** : பெயர் குறிப்பிடப்படவில்லை. (2:9)

**ஆண்பிள்ளைகள்.** : 14 பெயர் குறிப்பிடாதவர்கள்.  (1:2  42:13)

**பெண்பிள்ளைகள்.**: எமீமாள் கெத்சீயாள்  கேரேனாப்புக் 3 பெயர் குறிப்பிடாத பிள்ளைகள்.  (1:2  42:13-14)

**தொழில்.**: கால்நடைப் பண்ணை உரிமையாளர். (1:3)

## யோபுவிடமிருந்து கற்றுக் கொள்ளக் கூடிய  ஆவிக்குரிய பாடங்கள்.

- நீதிமானாகவும் செல்வந்தனாகவும் இருந்தார். (1:1-3).

- ஒரு விசுவாசியைச் சாத்தான் சோதனை செய்வதற்கு முன்பாக கர்த்தரிடம் அனுமதி பெற்றாக வேண்டும். (1:6-12  2:1-6)., எல்லாத்திற்கும் மேலாக எல்லாச் சோதனைகளின் எல்லைகளையும் கர்த்தரே தீர்மானிக்கின்றார், ஏனெனில் ஒவ்வொருத்தரும் எவ்வளவு சுமக்கமுடியும் என்பதைக் கர்த்தருக்கு மட்டும் தெரியும்.(1.கொரி. 10:13).

- யோபுவின் மூன்று நண்பர்களும், யோபுவின் பாவித்தினாலேதான் இந்தத் துன்பங்களை அனுபவிக்கின்றார் என்ற முடிவிற்கு வந்தார்கள். (4:7-8  8:20)இ ஆனால் அவர்களின் இந்த தவறான போதனைகளை கர்த்தர் கடிந்து கொண்டர்.  (42:7 யோவான் 9:1-3)

யோபு துன்ப்ப்படுவதற்கு கர்த்தரால் அனுமதிக்கப்பட்டார் என்பதே உண்மையாகும், அதன்மூலம் பல அனுபவங்களை அவர் பெற்றுக் கொண்டார்.

» சாத்தானின் குற்றச் சாட்டுக்கு மறுமொழியாக (1:9-11 2:4- )

» கர்த்தரின் கர்தத்துவத்தை விளங்கப்பண்ணுவதற்காக (42:1-5)

» யோபு தன்னுடைய சொந்தப் பாவத்தில் அதிக அக்கறை கொள்வதற்காக (29 31 40:4 42:6) கர்த்தர் சில காரணங்களுக்காக துன்பத்தை அனுமதிக்கின்றார்.

» இதைப்பயன்படுத்தி நம்மைச் சோதிக்கின்றார். (எபிரே. 12:5-11). கிறிஸ்த்து பாவமற்றவராக இருந்தும் உபத்திரத்தின் மூலம் கற்றுக் கொண்டார். (எபிரே. 5:8).

» நாங்கள் மற்றவர்களுக்குச் சாட்சியாக இருக்கும் வண்ணமாக அவரே துன்பத்தை நம்மேல் வர அனுமதிக்கின்றார். (யோவான் 9:1-3).

» சிலவேளைகளில் எங்கள்மேல் நாமே துன்பத்தை வரவழைக்கின்றோம்.

» விழுந்துபோன இந்த உலகத்தில் துன்பமும் துயரமும் வாழ்வின் பகுதியாகவே மாறிவிட்டது, இது யாருடைய குற்றமுமல்ல. (ரோம.8:18-39).

**திறவு கோல் வசனம்**. :-**துன்பத்தில் அமைதியாயிருத்தல்**. என் சகோதரரே கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள். இதோ பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள் கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே. (யோக் 5:10-11).

நன்றி இயேசுவே

திராணி